ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை




| வேணு : 11 | ஜனவரி – 2006 | கானம் : 6 |
|---|---|---|


www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாள் இரண்டாவது ப்ரதிஷ்டா தினத்தன்று
"ஹரே ராம ..." மஹாமந்திரம் ப்ரசாரம் செய்யும் நாமபிக்ஷா கேந்த்ராவினருக்கு
ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி, ப்ரஸாதமும், Mementoவும் வழங்கினார்கள்.

**தேதி : 26.01.2004 - இடம் : மதுரபுரி, மஹாரண்யம்.**



ஸ்ரீ சண்முகம், கோவூர் கேந்த்ரா, சென்னை



ஸ்ரீ சாரநாதன், குரோம்பேட்டை கேந்த்ரா, சென்னை

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சி விபரம்

| | |
|---|---|
| 10.01.2006<br>காலை | வைகுண்ட ஏகாதசி<br>இடம்: மதுரபுரி |
| 12.01.2006 முதல்<br>13.01.2006 வரை | ராதா கல்யாணம்<br>இடம்: பெரம்பூர் கிராமம், மன்னார்குடி |
| 14.01.2006 முதல்<br>16.01.2006 வரை | ராதா கல்யாணம்<br>இரவு : பிரவசனம்<br>இடம்: **Chandrasekhara Bharathi**<br>**Chandrasekharendra Saraswathi**<br>**Veda Vidhyalaya Trust,**<br>**3/117, Ayyasamy Garden,**<br>**Perur Chettipalayam, Coimbatore - 10** |
| 20.01.2006<br>இரவு : 7.00 – 9.00 | ஸத்சங்க மண்டப துவக்க விழா, பிரவசனம்<br>இடம்: ஸத்சங்க மண்டபம்<br>வடக்கு பூங்கா தெரு,<br>அம்பத்தூர், சென்னை – 53 |
| 25.01.2006<br>காலை | ஏகாதசி<br>இடம்: மதுரபுரி |
| 27.01.2006 வரை<br>காலை : 7.00 | பஜனை மேளா – துவக்க விழா<br>இடம்: விட்டல் மந்திர்<br>ஆதம்பாக்கம், சென்னை |
| 28.01.2006<br>மாலை : 6.00 – 8.00 | பிரவசனம் – ஆண்டு விழா<br>இடம்: விஷ்ணு சஹஸ்ரநாம பாராயண<br>மண்டலி, குரோம்பேட்டை, சென்னை – 44 |
| 30.01.2006 முதல்<br>02.02.2006 வரை | ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்<br>ப்ரதிஷ்டாதின வைபவம்.<br>இடம்: ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள்<br>திருக்கோயில், மஹாரண்யம் |
| 07.02.2006 முதல்<br>08.02.2006 வரை | பிரவசனம் – பாகவத மேளா<br>இடம்: அம்பத்தூர், சென்னை – 53 |
| 08.02.2006<br>காலை | கும்பாபிஷேகம்<br>இடம்: ஸ்ரீ ராமர் திருக்கோவில்<br>குடியாத்தம் |
| 10.02.2006<br>காலை 8 – 9:30 | பிரவசனம்<br>இடம்: கற்பக விநாயகர் திருக்கோயில்<br>SCM Textile Mills Complex, அவினாசி |
| 12.02.2006 | கும்பாபிஷேகம்<br>இடம்: ஸ்ரீ ராமர் திருக்கோவில்,<br>அணைக்கட்டு, வேலூர் |

சுபம்

# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No.
TN / CC (S) DN / 119 / 06-08

Licensed to Post without prepayment
WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08

வேணு : 11 | ஜனவரி – 2006 | கானம் : 6




கும்பாபிஷேக தினத்தன்று

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை

இடம் : ஸ்ரீ கங்காபுரம் கிராம திருக்கோயில், ஆம்பூர்.

தேதி : 12.12.2005


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;
e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

(தெய்வீக மாதப் பத்திரிகை)

வேணு : 11 ஜனவரி 2006 கானம் : 6

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எம்பார் அருளிச்செய்த சூர்ணிகை | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 121 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 93 | 11 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 8 | 14 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 96 | 18 |
| 8. | மாலே மணிவண்ணா! - 40 | 20 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 39 | 23 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 121 | 25 |
| 11. | அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களுடன் | 29 |


जाह्नवी मूर्ध्नि पादे वा कालः कण्ठे वपुष्यथ ।
कामारिं कामतातं वा कञ्चिद्देवं भजामहे ॥

கங்கையைத் தலையில் அணிந்தவராயிருந்தால் என்ன? அல்லது பாதத்தில் வைத்தவராயிருந்தால் என்ன? கழுத்து மட்டும் கருப்பாயிருந்தால் என்ன? உடல் முழுவதும் கருப்பாயிருந்தால் என்ன? மன்மதனை எரித்தவராயிருந்தால் என்ன? மன்மதனின் தந்தையாயிருந்தால் என்ன? அந்தப் பரம்பொருளையே நாம் வழிபடுவோம்.

ஸ்ரீ ஹரி:

# எம்பெருமானார் விஷயமாக எம்பார் அருளிச் செய்த வடிவழகு சூர்ணிகை

*பற்பமெனத் திகழ் பைங்கழலுன்றன்*
*பல்லவமே விரலும்*
*பாவனமாகிய பைந்துவராடை*
*பதிந்த மருங்கழகும்*
*முப்புரி நூலொடு முன்கை ஏந்திய*
*முக்கோல் தன்னழகும்*
*முன்னவர் தந்திடு மொழிகள் நிறைந்திடு*
*முறுவல் நிலாவழகும்*

*கற்பகமே விழி கருணை பொழிந்திடு*
*கமலமுகத்தழகும்*
*காரிசு தன்கழல் சூடிய முடியும்*
*கனநற்சிகையழகும்*
*எப்பொழுதுமிராமாநுசன் வடிவழகென்*
*இதயத்துளதால்*
*இல்லையெனக்கெதிர் இல்லையெனக்கெதிர்*
*இல்லையெனக்கெதிரே!*

**புத்தாண்டு வாழ்த்துக்கள்**

மதுரமுரளி வாசகர்கள் அனைவருக்கும் 2006 - ஆங்கிலப் புத்தாண்டு வாழத்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருவருளும், திருவருளும் நம்மை எப்பொழுதும், எல்லா வகையிலும், பரிபூரணமாக வழிநடத்திச் செல்ல பிரார்த்திக்கின்றோம்.

- **ஆசிரியர்**

## 121

ஒருநாள், சத்சங்கத்தில், ஸ்ரீ ஸ்வாமிஜி, பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணரைப் பற்றி உபன்யாசம் செய்தார்கள். அப்பொழுது, ஸ்ரீ ராமக்ருஷ்ணர், பகவான் விஷ்ணுவின் அவதாரம் என்றும், யார் ராமராக அவதரித்தாரோ, யார் கிருஷ்ணராக அவதரித்தாரோ, அவரே இப்பொழுது ராமக்ருஷ்ணராக அவதரித்துள்ளார் என்றும் கூறினார்கள்.

அப்பொழுது ஒருவர், நம் ஸ்வாமிஜியிடம், ‘‘ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸரை விஷ்ணுவினுடைய அவதாரம் என்று கூறினீர்கள். அதுபோல், திருவையாறு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளை வால்மீகி அவர்களுடைய அவதாரம் என்கிறார்கள். புரந்தரதாஸரை நாரதருடைய அம்சம் என்கிறார்கள். இப்படி, உலகத்தில் தோன்றிய மஹாபக்தர்களை எல்லாம் ஏதோ ஒரு தெய்வத்தின் அவதாரம் என்றும், அல்லது ஏதோ ஒரு மஹரிஷியின் அவதாரம் என்றும் கூறுகின்றோம். இதைப் பார்க்கும்பொழுது, எனக்கு இரண்டு சந்தேகங்கள் வருகின்றன. முதலாவதாக, என்னைப் போன்ற சாதாரண மனிதர்கள் இத்தகைய அனுபூதியையோ அல்லது அவர்கள் அடைந்த உயர்ந்த ஞான அனுபவங்களையோ பெறமுடியுமா? என்பது. இரண்டாவதாக, ஸ்வயம் பகவானாகவே இருக்கும் இவர்கள் பகவானுக்காக ஏன் அழவேண்டும்? என்பது’’.

இதற்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், ‘‘சிறு குழந்தைகள் கூட பல மணிநேரம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்கின்றது. சினிமாப் பாடல்களை ரசித்துக் கேட்கவும் கேட்கின்றது. அதைப் பாடவும் செய்கின்றது. அதுபோலவே, விளையாட்டுகளை ரசிக்கின்றது. விளையாடவும் செய்கின்றது. அதே குழந்தையை, சில நிமிடங்கள்கூட பஜனையிலோ, பகவானுடைய கதைகளைக் கேட்பதிலோ, உட்கார வைக்க முடியாது. காரணம் என்ன? ஒரு தீபத்தை ஏற்றினால், அந்த தீபச்சுடர் எப்படி மேல்நோக்கியே எரிகின்றதோ, எப்படி நீரானது பள்ளத்தை நோக்கியே ஓடுகின்றதோ,

அதைப்போல், இயற்கையிலேயே மனிதனுடைய மனமும் உலக விஷயங்களை நோக்கி ஓடுவதாகதான் அமைந்துள்ளது.

இறைவனை நேருக்குநேர் பார்க்கவேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை இருக்கின்றது. ஆனால், நாம் யாரும் இறைவனுக்காக ஏங்குவதோ, அழுவதோ இல்லை. சில சமயங்களில், இறைவன் முன்பாக அழுது கண்ணீர் விடுகின்றோம். அதற்கு என்ன காரணம் தெரியுமா? நமது துயரங்களையும், இயலாமையையும் நினைத்து பச்சாதாபம் ஏற்படுவதால் வரும் கண்ணீரே தவிர, இறைவனை அடையவேண்டும் என்ற ஆசையினால் வரும் கண்ணீர் அல்ல அது. எனக்கு இறைவனை நினைத்து அழுகை வரமாட்டேன் என்று நீங்கள் நினைப்பது எனக்குப் புரிகின்றது.

நினைத்தபோது, நாம் நிற்கலாம், உட்காரலாம், கைகளைத் தட்டலாம். ஆனால், அழமுடியாது. அப்படியிருக்கும்பொழுது, நாமாக அழுகையை வரவழைத்துக்கொள்ள முடியுமா? சரி, இறைவனுக்காக அழாமல் அவனை காணமுடியாது. ஆனால், மனித மனமோ இறைவனுக்காக அழாது. பிறகு, நமக்கு எப்படி அந்த ஏக்கமும் அழுகையும் வரும் என்றால், உண்மையான அத்தகைய ஏக்கமும் அழுகையும் யாருக்காவது இருந்தால் அவர்களுடைய தொடர்பால் நமக்கு அவை ஏற்படும். ஆகவேதான், இறைவனே உலகத்தில் தோன்றி, இறைவனுக்காக அழுது, அல்லது ஏங்கி, அந்தக் காலகட்டத்தில் யார்யாரெல்லாம் அவனோடு தொடர்பு கொள்கின்றார்களோ, அவர்களுக்கும் அத்தகைய ஏக்கத்தை தன்னுடைய சங்கத்தால் கொடுக்கின்றான்.

மனித மனது, இயற்கையாகவே இறைவனுக்காக ஏங்கும் இயல்பை உடையது அல்ல என்பதால், இறைவனே பூமியில் தோன்றி, அவனே அழுது, மனித மனத்திற்கும் அத்தகைய ஏக்கத்தை ஏற்படுத்துகின்றான். அதனால்தான் இறைவனே அவதாரம் செய்யவும் செய்கின்றான். அவனே, இறைவனுக்காக அழவும் செய்கின்றான்'' என்று ஸ்ரீ ஸ்வாமிஜி பதில் கூறினார்கள்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : நீங்கள் சொல்லும் உபந்யாசம், உங்களுடைய பஜனை, நீங்கள் கொண்டாடும் கோகுலாஷ்டமி உத்ஸவம் போன்றவைகளுக்கு, வந்தவர்கள்தானே மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருக்கின்றார்கள்!*

பதில் : ஒரு வீட்டில், தாய் தன்னுடைய குழந்தைகளுடன் எப்பொழுதுமே சேர்ந்து வாழ்வதற்கு ஆசைப்படுகிறாள். அதற்கென்ன காரணம்? ப்ரேமைதான் காரணம். அதுபோல், பக்தர்களான எங்களுக்கு, யார் பகவானுடைய கதைகளைக் கேட்பதிலும், அவனுடையப் புகழைப் பாடுவதிலும், அவனைக்கொண்டாடுவதிலும் ஆசை உள்ளவர்களாக இருக்கின்றார்களோ, அவர்களுடன் சேர்ந்து, அவன் குணத்தைப் பேசி, பாடி, கொண்டாடி அனுபவிப்பதே எங்களுக்கு ஆனந்தம். பிரச்சாரம் எல்லாம் அடுத்தபடியான விஷயம். யார்யாரிடமெல்லாம் உண்மையான பக்தி இருக்கின்றதோ அவர்களால் பிரச்சாரம் தானாகவே நடக்கும்.

***கேள்வி : அந்தக்காலத்தில், எல்லோரும் கள்ளம், கபடமற்ற குணம் உடையவர்களாக இருந்தார்கள். ஆகவே, அவர்களுக்கு நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட பக்தி மார்க்கம் பலன் தந்தது. இப்பொழுது, எல்லோரும் அறிவுப் பெருகி கேள்வி கேட்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, வேதாந்த மதம் தானே சரியான தீர்வைத் தரும்?***

பதில் : நீங்கள் சொல்வது போலவே, இப்பொழுது எல்லாருடைய அறிவுத்திறனும் அதிகரித்துள்ளதால், விசாரம் செய்யக்கூடிய வேதாந்தத்தால் இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக்கொள்ள வைக்க முடியலாம். இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக்கொண்டால் மட்டும் போதுமா? பூரண வைராக்யம் வேண்டாமா? அவனுக்கு சம்மதமாக வாழ வேண்டாமா?

அதாவது, உண்மை, அன்பு, ஒழுக்கம் இவைகள், அறிவு வளர்வதால் வந்துவிடுமா? வேதாந்தமும் என்ன சொல்கின்றது? தத்துவத்தை தெரிந்துகொண்டால் மட்டும் போதாது. ஸர்வஸங்க

பரித்யாகம்; அதாவது சந்யாஸம் வாங்கிக்கொண்டு, பூரண வைராக்யத்துடன் இருந்தால்தான், ஞானானுபவம் கைகூடும். அறிவினால் தத்துவத்தை மட்டுமே தெரிந்துகொள்ளலாம். ப்ரேம பக்தியும் இவர்களுக்கு சிரமம் என்று தெரியும். அதனால்தான் நம்பிக்கை இருக்கின்றதோ இல்லையோ, ''ஹரே ராம......'' என்ற மஹாமந்திரத்தைச் சொல். அஜாமிளன் மாதிரியாவது கரையேறி விடுவாய் என்கின்றோம்.

*கேள்வி : மஹான்களுடைய மஹிமை அளப்பரியதாக இருக்கும் பொழுது, ஏன் அவர்கள் தங்களுடைய மஹிமைகளை உபயோகித்து, அற்புதங்களை நிகழ்த்துவது இல்லை?*

பதில் : அப்படி அவர்கள் செய்வார்களேயானால், அவர்களிடம் இருக்கக் கூடியவர்களுக்கும், நாமும் இது மாதிரியாக சக்திகளை சம்பாதித்துக்கொண்டு, அற்புதங்களை நிகழ்த்த வேண்டும் என்றுதான் தோன்றுமே தவிர, மோக்ஷத்தை அடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படாது. அவர்களுடைய லக்ஷியம் திசை மாறிவிடும். அதனால்தான், ஒருபொழுதும் அவர்கள் தங்கள் மஹிமைகளை வெளிபடுத்தாமல் அசக்தர்களாகவே காட்டிக்கொள்கின்றார்கள். இருந்தாலும், அவர்களுடைய சந்நிதி பிரபாவத்தினாலேயே பல அதிசயங்கள் நிகழத்தான் செய்கின்றன.

*கேள்வி : பகவான் ஸ்ரீ ரமணர், திருவண்ணாமலையில் பாதாள குகையில் அமர்ந்து தவம் செய்தாரா?*

பதில் : தனக்கு மதுரையில் ஏற்பட்ட அந்த ஆத்மானுபவத்திலேயே ஆழ்ந்திருந்தாரே தவிர, தனியாக தவம் என்று எதுவும் செய்யவுமில்லை, செய்ய வேண்டியதற்கு அங்கு ஒன்றும் இல்லை. இருந்தபொழுதிலும், பகவான் ரமணரை, ஒரு ஈச்வர சக்திதான் இப்படியெல்லாம் செய்யச் செய்திருக்கின்றது என்பது மறுக்க முடியாத உண்மை. வானத்தில் சூரியன் சுழல்கின்றது, பூமி சுழல்கின்றது என்றெல்லாம் பேச்சுவாக்கில் சொல்கின்றோம். அதெப்படி பூமி, சூரியன், சந்திரன் இவைகள் எல்லாம் தானாக ஒரே க்ரமமாக சுழலும்! இவையெல்லாவற்றையும் ஒருவன் சுழற்றிவிட்டு, அவை சரியாக இயங்குகின்றதையும் கவனித்து வருகின்றான் என்பதே உண்மை!

*கேள்வி : என்னுடைய குரு, என்னை பகவானுக்கு கைங்கர்யம் செய்யச் சொல்கின்றார். ஆனால், எனக்கு தியானம் செய்வதில்தான் **'ருசி'** உள்ளது. நான் எதைச் செய்தால் நன்மை பயக்கும்?*

பதில் : 'ஞானம்' என்பது குருக்ருபையால்தான் ஏற்படுமே தவிர, நம்முடைய சாதனை முயற்சியால் மட்டும் ஒருபொழுதும் ஏற்படாது. நம்முடைய சாதனைகளின் பலனாக, நமக்கு பல அபூர்வமான சித்திகள் ஏற்படலாம். ஆனால், ஞானம் வராது. ஞானம், குரு க்ருபையால்தான் வரவேண்டியிருப்பதால், குருவிற்கு எது ப்ரீதியோ, அதைச் செய்து, அவருடைய அருளைப் பெற்று, ஞானத்தை சம்பாதித்துக் கொள்ளவேண்டும். அவர் ஆசைப்படுகின்ற கைங்கர்யத்தை செய்வதே நன்மை பயக்கும்.

*கேள்வி : பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், எந்தெந்த விதமான சாதனைகளைப் பின்பற்றினாரோ அது, அதற்கான உடைகளை உடுத்தி, அந்தந்த வழக்கங்களைப் பின்பற்றினார் என்று பார்க்கின்றோம். இதற்கான அவசியம் என்ன?*

பதில் : தலையை விரித்துப் போட்டுக்கொண்டு, அழுதுகொண்டு ஒரு சாதாரண உடை அணிந்துகொண்டால், அது பார்ப்பவர் மனதிலும், அப்படி இருப்பவர் மனதிலும் சோகத்தை உண்டு பண்ணுகிறது. அதுபோல், இரண்டு சிவப்புக் கண்கள், நாய் ஊளையிடும் சப்தம் இவையெல்லாம் நம்மிடம் பயத்தை உண்டாக்குகின்றது. அழகான, ஆடம்பரமான துணிமணிகள், அலங்காரங்கள், மங்கள வாத்யங்கள், மனதில் மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றது. ராணுவ உடை, முரசு சப்தம் இவை வீரத்தை உண்டுபண்ணுகின்றது. அதுபோல், நம்முடைய பக்தி சாஸ்திரங்களில் சொல்லப்பட்ட கோபீசந்தனம், துளஸீமாலை, வெள்ளை வஸ்திரம், பூஜையில் பயன்படுத்தப்படும் மணிசப்தம், தூபம், தீபம், புஷ்பம், சங்கு சப்தம் இவைகள் எல்லாம் மனதில் பக்தியைத் தூண்டும். ஆகவே, இதில் எல்லாம் ஒரு ஆழ்ந்த பொருள் இருக்கின்றது.

*கேள்வி : நான் என் வாழ்நாள் முழுவதும் பல புண்ய காரியங்கள் செய்து வருகின்றேன். எனக்கு முக்தி கிடைக்குமா?*

பதில் : ‘முக்தி’ என்பது இறைவனுடைய அருளால் அல்லது குருவினுடைய க்ருபையால் கிடைக்கக்கூடிய ஒன்று. அதை தான, தர்மங்களால், சாதனையால் பேரம் பேச முடியாது. வசிஷ்டரே இன்றும் ஸப்தரிஷி மண்டலத்தில்தான் இருந்து வருகின்றார். தசரதரே இன்றும் சுவர்கத்தில்தான் இருந்து வருகின்றார். ஆனால், பரமபாவியான அஜாமிளனோ, மோக்ஷம் அடைந்துவிட்டான்.

*கேள்வி : நாமா சொல்வதனால் என்ன நடக்கும்?*

பதில் : அஷ்டாங்க யோகம், கர்மா, தியானம், வேதாந்த விசாரம் செய்வதனால் எத்தகைய அனுபவங்கள் ஏற்படும் என்று பார்ப்பதைப் போல் இந்த விஷயத்தில் பார்க்கக்கூடாது. அவையெல்லாம் நம்முடைய சாதனைகளை ஒட்டிய விஷயம். ஆனால், இது இறைவனுடைய கருணையை அடிப்படையாகக் கொண்ட விஷயம். பகவானுடைய பெயரைச் சொல்ல வேண்டியது ஒன்றுதான் நாம் செய்ய வேண்டியது, மற்றதை அவன் பார்த்துக்கொள்வான்.

*கேள்வி : எந்த மந்திரங்களைச் சொன்னாலும் ஒரே பலன்தான் ஏற்படுமா?*

பதில் : மனதை ஒருமுகப்படுத்துவதற்காக என்றால், எந்த மந்திரங்களை வேண்டுமானாலும் சொல்லலாம். மந்திரத்திற்கான பலன் என்றால் அது வித்யாசப்படும். உதாரணமாக பணம் வேண்டும் என்றால், அதற்கான ஒரு மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும்; அதைச் செய்தால் பணம்தான் வருமே தவிர, வியாதி போகாது. ஆகவே, அந்த அந்த மந்திரங்களுக்குத் தகுந்த பலன்தான் ஏற்படும்.

Copyright of articles published in **'MADHURAMURALI'** is reserved. Reproduction of any article from **'MADHURA MURALI'** requires written consent from Publisher-Madhuramurali.

# மாதம் ஒரு புத்தகம்

வைஷ்ணவ ஆச்சார்யரும், விசிஷ்டாத்வைத சித்தாந்த ஸ்தாபகருமான ஸ்ரீ ராமானுஜருடைய வைபவத்தையும் மற்றும் அநேக வைஷ்ணவ ஆச்சார்யர்களுடைய வைபவத்தையும் சொல்லக் கூடிய புத்தகம் 'ப்ரப்பந்நாம்ருதம்'. இந்தப் புத்தகத்தில், மஹான்களுடைய வாழ்க்கையில் நடந்த பல்வேறு சம்பவங்கள், அவர்களுடைய ஆச்சார்ய பக்தியையும், பகவானிடம் உள்ள நிஷ்டையையும், வினயத்தையும், ரசிக ஸ்வ**பா**வத்தையும் காட்டக் கூடியதாக அமைந்துள்ளது. மொத்தம் இரண்டு பாகங்களை உடையது. இந்தப் புத்தகங்கள், ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், M.A. B.L., (ஆசிரியர், 'ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்' 3B, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி - 620 017) அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

திருக்கண்ண மங்கையாண்டான் என்ற மஹாத்மா, திருக்கண்ணமங்கை என்ற திருத்தலத்தில் வாழ்ந்துகொண்டு, ஸ்ரீ பக்தவத்ஸல பெருமாளுக்குத் துளஸித் தோட்டத்தை ஏற்படுத்தி, தினம்தோறும் துளஸீ மாலைகளைக் கட்டிக் கொடுத்து, கைங்கர்யம் செய்து வந்தார். ஒருநாள், இரண்டு நபர்கள், கோவிலுக்குப் பெருமாளை தரிசனம் செய்ய வருகின்றனர். அவர்களுடன், அவர்களுக்குச் சொந்தமான நாய்களும் வந்தது. அவைகள் கோவில் வாசலில் தங்கள் தங்கள் தலைவனுடைய செருப்புகளைக் காவல் காத்துக்கொண்டிருந்தது. அவர்கள் இருவரும், இறைவனை தரிசனம் செய்துவிட்டு வரும்பொழுது, ஒருவருடைய நாய் மற்றவருடைய செருப்பைக் கடிக்க நேர்ந்ததால், அந்த நாய்களுக்குள் சண்டை ஏற்பட்டு, ஒரு நாய் இறந்துவிட்டது. எந்த நாய் இறந்துவிட்டதோ, அந்த நாய் யாருக்கு சொந்தமோ, அவர் மற்றவருடைய நாயைக் கொன்றுவிட்டார். இதனால் கோபமடைந்த மற்றவர், இவருடன் வாள் கொண்டு சண்டையிட, இருவருக்கும் சண்டை வலுத்து, இருவரும் ஒருவரை ஒருவர் குத்திக்கொண்டு இறந்துவிடுகின்றனர்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அந்த மஹாத்மாவுக்கு, இந்த தலைவர்களுக்கே தங்களுடைய நாய்கள் மேல் இவ்வளவு பரிவு

இருந்து, அதனால் ஒருவரை ஒருவர் வெட்டி மாய்த்துக் கொள்வார்களேயானால், பகவானுக்கு நம் மேல் எவ்வளவு பரிவு இருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தார். அதன் பிறகு சர்வ சாதனைகளையும் விட்டு, நாய்போல் நான்கு கால்களால் (கை, கால்களால்) நடந்து, ஊர் குளத்தில் நீராடிவிட்டு, கோவிலில் உள்ள மகிழ மரத்தடியிலேயே படுத்துக் கிடந்தார்.

கோவிலில் பிரசாதம் கொடுத்தால், நாய் போலவே சாப்பிட்டு, எந்தக் காரியமும் செய்யாமல் இருந்தார். ஊரார், இதை வினோதமாக பார்த்தார்கள். பலர், அவருக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றார்கள். மற்றவர்களோ, மாயையில் சிக்கிக் கொண்டுவிட்டார் என்றார்கள்.

ஆனால், ஒருநாள், பக்தவத்சலனான பகவான் எல்லோருடைய கனவிலும் தோன்றி, ''நாளை காலை கோவிலுக்கு வரவும். அங்கு, யாம் அந்த பக்தருக்கு மோக்ஷம் கொடுக்கப் போகின்றோம்'' என்று தெரிவிக்க, அதன்படியே, ஊராரும் கூடினார்கள். அந்த விஷயத்தை அந்த மஹாத்மாவிற்கும் பகவான் தெரிவித்திருந்தார். அப்படி எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்க, கோவிலில் உள்ள பலி பீடத்தின் அருகே, கண்ணைப் பறிக்கும் ஒரு மின்னல் ஒளி தோன்றியது. அந்த மின்னல் ஒளியில் அவர் அப்படியே கலந்து விட்டார்.

ஒரு நாயிடம், அதனுடைய உரிமையாளருக்கு இருக்கும் பரிவைப் பார்த்துத் தன்னையும் நாய் போல் **பா**வித்து எந்த சாதனையும் செய்யாமல் பகவானுடைய கருணை ஒன்றையே எதிர்பார்த்திருக்க, அதுவே, சரணாகதனின் லக்ஷணம் என்று நினைத்திருக்க, அவனுக்கு பகவான் மோக்ஷம் அளித்த இந்தச் சம்பவம், சரணாகதியின் லக்ஷணங்களையும், சரணாகதனிடத்தில் பகவானுக்கு இருக்கும் பரிவையும் காண்பிப்பதாக அமைந்திருக்கின்றது.

**— டாக்டர். ஆ. பாக்யநாதன்**

---

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# எந்தரோ மஹானுபாவுலு - 93

சாக்ஷிகோபாலன் கோவிலில் இரவுப்பொழுதை கழித்த மஹாப்ரபு அடுத்தநாள் காலை மங்கள ஆரத்தி தரிசனம் செய்துவிட்டு, தன் பயணத்தைத் தொடர்ந்தார். ஜகன்னாதரை தரிசிக்க வேண்டும் என்ற ஆவல், அவருடைய மனதில் தீவிரமாக எழுந்துகொண்டே இருந்தது. நடக்க, நடக்க அவரது இச்சையும் பலம் பெற்றது. வழியெல்லாம் தன் இனிய குரலில் முகுந்ததத்,

*''ராம ராகவா, ராம ராகவா ராம ராகவா ரக்ஷமாம்*
*கிருஷ்ணகேசவா கிருஷ்ணகேசவா கிருஷ்ணகேசவா பாஹிமாம்''*

என்று நாமசங்கீர்த்தனம் செய்துவந்தார். அனைவரும் அதை வாங்கிப் பாடினர். ஜன ஆரவாரமற்ற வழியில், நாமசங்கீர்த்தனம் மிகவும் அழகாக எதிரொலித்தது. மஹாப்ரபு, **பா**வ ஆவேசத்தால் நடனமாட ஆரம்பித்தார். ஒருவருக்காவது சுய நினைவு இல்லை - நாம் எங்கு செல்கிறோம்? சரியான வழியில்தான் செல்கிறோமா? என்பதெல்லாம் தெரியாமல் அனைவரும் மெய்மறந்து கீர்த்தனம் செய்தனர். இப்படி கீர்த்தனம் செய்துகொண்டே, புவனேஸ்வர் என்னும் தலத்திற்கு வந்துசேர்ந்தனர். அங்கு ''பிந்துஸரஸ்'' என்ற பவித்ரமான ஏரி உள்ளது. இந்த ஏரி சம்பந்தமாக ஒரு கதை உண்டு. சிவபெருமான் அனைத்து தீர்த்தங்களிலிருந்தும், ஒவ்வொரு பிந்து (சொட்டு) பிந்துவாக நீர் கொண்டுவந்து இந்த தீர்த்தத்தை ஏற்படுத்தியதால் இதற்கு ''பிந்துஸரஸ்'' என்ற பெயர் உண்டாயிற்றாம். மஹாப்ரபு, தன் பக்தர்களுடன் இந்த தடாகத்தில் ஸ்னானம் செய்து விட்டு, புவனேஸ்வர் மஹாதேவனை தரிசிக்க ஆலயத்திற்குள் சென்றார்.

மஹாதேவனின் மிக அழகுபொருந்திய, மங்களமான மூர்த்தியைக் கண்டு, ப்ரபு மூர்ச்சையடைந்தார். சிறிது நேரம் கழித்து, புற உலக நினைவு வந்தது. உடனே, நாமகீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார். பக்தர்களுடன் தன் இருகைகளையும் மேல் நோக்கி உயர்த்தி, ''சிவசிவ சம்போ''/''ஹரஹர மஹாதேவ'' என்ற பதங்களை பாடி, ஆடி பக்தர்கள் புடைசூழ விளங்கினார்.

புவனேஸ்வர் மஹாதேவனின் கோவில் மிகவும் புராதனமானது. இங்குள்ள சிவபெருமானும் மிகப்பழமை வாய்ந்தவர். புவனேஸ்வரை 'குப்தகாசி' என்றும் அழைப்பர். ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் வெகுதூரத்திலிருந்து, தரிசனத்திற்காக இந்த ஆலயத்திற்கு வருவார்கள். நாற்புறமும், அழகாக ஒளிர்ந்த தீபங்களைக் கண்டு, மஹாப்ரபு ஆனந்தமடைந்தார். நிறைய நேரம் நாம சங்கீர்த்தனம் செய்துவிட்டு, அங்கேயே அன்று ஓய்வு எடுத்துக் கொண்டார்.

அன்றிரவு, பக்தர்களுடன் ப்ரபு கதை சொல்ல அமர்ந்ததும், முகுந்தத்த் ப்ரபுவின் பாதங்களை மெல்ல பிடித்து விட்டுக் கொண்டே, ''ப்ரபோ! நீங்கள் எந்தத் தீர்த்தத்துக்கு சென்றாலும், அந்தத் தீர்த்தத்தின் மஹாத்மியத்தை அவசியம் கேட்க வேண்டும் என்று கூறுவீர்களே! ஏகாந்தப்ரியனான மலை காடுகளில் திரியும் பகவானான மஹாதேவன், இந்த உத்கல தேசத்தில் எப்படி வந்து கோவில் கொண்டுள்ளார்? காசியை விட்டு, இந்த புதிய குப்தகாசியை ஏன் நிர்மாணித்தார்? இவை பற்றித் தெரிந்துகொள்ள ஆவலாக உள்ள எங்களுக்கு, புவனேஸ்வர் பகவானின் கதையைக் கூறி, எங்கள் காதுகளை பவித்ரமாக்க வேண்டும்'' என்று வேண்டினார்.

உடனே ப்ரபு சிரித்துக்கொண்டே, ''முகுந்தா! நீ மிகவும் உத்தமமாக கேள்வி கேட்டுள்ளாய்! இந்த பகவான், இங்கு வந்த கதை அற்புதமானது. ஸ்கந்தபுராணத்தில் இதுபற்றி விஸ்தாரமான வர்ணனை உள்ளது. அதைச் சுருக்கமாக நான் உங்களுக்குக் கூறுகிறேன். இதை நீங்கள் தியானத்துடன் கேளுங்கள்'' என கூற ஆரம்பித்தார்.

முற்காலத்தில், பகவான் சிவன், ''காசிவாசி'' என்ற பெயரால்தான் புகழ் பெற்றவர். வாராணசி க்ஷேத்ரம்தான் அவரது லீலாஸ்தலமாக இருந்தது. அவரது அனைத்து வேலைகளும் விசித்ரமாக இருக்கும். எனவே, அவரை ''ஔகடநாத்'' என்றும் அழைப்பார்கள். ஒருசமயம், ஔகடநாத்துக்கு காசிதேசம் மிகவும் உஷ்ணமாக இருந்தது. அதனால், அவர் காசியை விட்டுவிட்டு கைலாச பர்வத சிகரத்திற்குச் சென்று வசிக்கலானார். இங்கு காசி சூன்யமாகிவிட்டது. காசி மன்னன், மிகவும் பக்தியுடன், பகவான் பூதநாத்தின் பூஜையைச் செய்து வந்தான். ஆயிரம் ஆண்டுகள் சிவ பூஜையை விடாது செய்தான். பக்திக்கு எளிதில் வசப்படும் சிவன்,

ராஜாவின் முன்பு தோன்றி, வேண்டிய வரத்தை கேட்குமாறு கூறினார்.

ராஜா இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு, வினயத்துடன், ''ப்ரபோ! நான் உங்களிடம் என்ன கேட்பேன்! உங்கள் அனுக்ரஹத்தால் என்னிடம் **த**னம், **தா**ன்யம், புத்ரன், பரிவாரம் போன்ற இந்த உலகத்தில் உத்தமம் என்று நினைக்கக்கூடிய, பல சுகங்கள் உள்ளன. எனக்கு ஒரே ஒரு ஆசை உள்ளது. அதை நீங்கள் பூர்த்தி செய்து வைக்க முடியுமா? என்று சந்தேஹமாக உள்ளது'' என்றான்.

சிவபெருமான், ''ராஜன்! நான் ப்ரசன்னமாகிவிட்டால் என்னால் அளிக்க முடியாத வஸ்து ஒன்று மூன்று உலகத்திலும் கிடையாது! உன் ஆசை என்ன என்று சங்கோசமின்றி சொல்'' என்றார்.

ராஜா மிகவும் பணிவுடன், ''ஹே வரதா! நீங்கள் ப்ரசன்னமாகி எனக்கு வரமளிப்பதானால், யுத்தத்தில் ஸ்ரீக்ருஷ்ணனையும் நான் ஜயிக்க முடியும் என்ற வரத்தை எனக்கு அளியுங்கள்'' என்று கேட்டான்.

சிவபெருமான் பக்தர்களுக்கு வரதானம் அளிப்பதில் யோசிப்பதே இல்லை. தனக்கே அதனால் கஷ்டம் நேரும் என்றாலும் அதைப் பற்றி சிந்திக்காமல் பக்தர்கள் கோரியதை இல்லை என்றும் கூறாமல் அப்படியே வரமளித்து விடுவார். சிவபெருமான் அரசனிடம், ''ராஜன்! நீ பயப்படாதே! நான் யுத்தத்தில் உனக்கு ஸ்ரீ க்ருஷ்ணனிடம் இருந்து வெற்றியை வாங்கித் தருகிறேன். உன் சேனையை தயார் செய்து யுத்தத்திற்குப் புறப்படு. உனக்குப் பின்னால் பூத, பிசாச, வேதாளங்களை யுத்த க்ஷேத்திரத்திற்கு அனுப்புகிறேன். நானும் வருகிறேன். இந்தா, என்னுடைய பாசுபதாஸ்த்ரம். இதனுடைய உதவியால் ஸ்ரீக்ருஷ்ணனின் சம்பூர்ண சேனையையும் நீ அழித்துவிடலாம்'' என்று கூறிவிட்டு தன்னுடைய பாசுபதாஸ்த்ரத்தை மிகவும் மகிழ்ச்சியுடன் ராஜாவுக்கு அளித்தார். சிவபெருமானிடமிருந்து திவ்ய அஸ்த்திரத்தை பெற்றுக்கொண்டு மனமகிழ்ந்த காசிராஜா, ஸ்ரீக்ருஷ்ணன் மீது படையெடுத்தான்.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள்

**- குடந்தை என். ராமசர்மா**

## பகுதி - 8

கற்கண்டின் இனிப்பு கண்களுக்குப் புலனாவதில்லை. வாக்கினால் எடுத்துச் சொல்லப்பட முடிவதில்லை. அறிவுக்கும் விஷயமாவதில்லை. கற்கண்டை தினம் தினம் சுவைத்து அனுபவித்துக் கொண்டுதானே இருக்கிறோம். கண்ணன் மட்டும் விதிவிலக்கா என்ன? அனுபவித்துத்தான் பார்ப்போமே புறப்படுங்களேன் என்கிறார் ஸ்ரீசங்கரர்.

மேலும் ப்ரேம ரஸம் பேதத்தில் தோன்றி, பேதாபேதத்தில் நிலைபெற்றிருப்பதுபோல் காணப்பட்டாலும், அத்விதீயமான இரண்டற்ற அனுபவ நிலையிலேயே முடிகிறது என்கிறார்.

மிக மிகக் குறைவான அளவுடைய விட்டத்தைக் கொண்டது புள்ளி. விட்டத்தின் விரிவு அதிகரிக்க அதிகரிக்க புள்ளியே விரிகிறது, வட்டமாகிறது. ஸ்தூல பக்தியின் துவக்க நிலையில் புள்ளி போன்றிருக்கும் ஜீவன், சூக்ஷ்ம பக்தியின் எல்லையில் பெரிய வட்டமாகிறான். ப்ரேம ரஸத்தின் விளிம்பில் தன்னைக் கண்ணனில் இழந்துவிடுகிறான், கண்ணனாகவே ஆகிவிடுகிறான்.

இக்கருத்தைத் தனது ஷட்பதீ துதியில் மிக அழகாகவும் தெளிவாகவும் கூறுகிறார்.

सत्यपिभेदापगमेनाथतवाहं नमामकीनस्त्वम् ।
सामुद्रोहितरङ्गः क्वचन समुद्रोनतारङ्गः ॥

*ஸத்யபி போதாபகமே நாத தவாஹம் ந மாமகீநஸ்த்வம் ।*
*ஸாமுத்ரோ ஹி தரங்க: க்வசந ஸமுத்ரோ ந தாரங்க: ॥*

''க்ருஷ்ணா! நீயும் நானும் (ப்ரஹ்மமும் ஜீவனும்) வேறு வேறு என்ற வதம் ஞானாபூதியில் போய்விட்டாலும் கூட ஒன்று சொல்கிறேன் கேட்டுக் கொள். என்றும் நான் உன்னைச் சேர்ந்தவனே;

உன் உடைமை. நீ என்னுடையவன் அல்லன். என் உடைமை அல்ல. எப்படி? அலை கடலைச் சேர்ந்தது. கடலின் உடைமை. கடல் அலையைச் சேர்ந்ததில்லை. அலையின் உடைமை இல்லை.

பேதம் காட்டி, பேதத்தில் அபேதம் காட்டி, பேதாபேதம் சொல்லி அபேதத்தை நிலை நாட்டும் வித்தை ஆசார்யாளுக்கே கை வந்த கலை. இதுவும் ஒரு ரஸம். ஷட்பதியின், ஆறுகால் வண்டின் கான ரஸம். ஷண்மத ஸ்தாபகரின் ஏகமத ரஸம்.

'நான் கடலைச் சேர்ந்தவன்' என்று அலை முதலில் நினைக்கிறதாம். இரண்டாவது நிலையில், 'இக்கடல் என்னைச் சேர்ந்தது' எனக் கருதுகிறதாம். மூன்றாவது நிலையில் 'நானும் கடலும் வேறில்லையே', ஒன்றுதானே' என்று உணர்கிறதாம். அலை போன்றவனே ஜீவனும்.

'நான் கண்ணனைச் சேர்ந்தவன்' என்று முதலில் நினைக்கிறான். இது பக்தியின் ஆரம்ப நிலை. ம்ருதுவானது. இரண்டாவது நிலையில் 'கண்ணன் என்னைச் சேர்ந்தவன்' எனக் கருதுகிறான். பக்தி ஞானத்துடன் ஒன்றிணையும் இந்நிலை மத்யம். மூன்றாவது நிலையில் நானும் கண்ணனும் வேறில்லையே, ஒன்றுதானே என்று உணர்கிறான். ப்ரேம பக்தியின் ஞான பூரிப்பு. இது தீவ்ரம்.

இறைவனும் பொறுக்கமாட்டாமல் 'ஞாநீது ஆத்மைவ' என்று ஓடிவருகிறான். ஏனெனில், 'ப்ரியோஹி ஞாநிநோ அத்யர்த்தம்' என்று சொன்னவனில்லையோ இவன். ப்ரேம பக்தியில் ஊறியவனும், நிலை பெயரா போகத்தில் கூடி நிற்பவனுமே ஞானி என்பது கண்ணன் கருத்து. இக்கருத்தையே 'ஷட்பதீ துதி'யில் பாங்காகப் பகர்வார் பகவத்பாதர்.

மூன்று நிலைகளிலும் நினைப்பில்தான் வேறுபாடு இருக்கிறது. இருப்பில் வேறுபாடு இல்லை. ஜீவன், என்றும் ப்ரஹ்மமாகவே இருக்கிறான். உபாதி, வேதங்களால், ஞான அக்ஞான தாரதம்யங்களால் தோன்றும் வேறுபாடு நாம ரூபங்களில் மட்டுமே. அதிஷ்டான ஸத்தையில் கிடையாது. இதை இரண்டாவது வரியில் எடுத்துக் காட்டுகிறார்.

அலை எழும் முன்னரும், எழும்போதும், அடங்கிக் கடலில் ஒடுங்கும்போதும் கடல்தான். ஆனால், அலை வேறாகவும் கடல் வேறாகவும் தோன்றுகிறது. வ்யவஹாரத்தில் பேதம் தோன்றுவது உண்மைதான். பாரமார்த்திக நிலையில் பேதம் தோன்றிக் கொண்டிருக்கும்போதே அபேத தர்சனம் காண்பவன், அதிஷ்டான இருப்பைக் காண்பவன் ஞானி. ய:பச்யதி ஸ பச்யதி. இவனே வ்யவஹார நிலைக்கு இறங்கி வரும்போது ப்ரேம ரஸம் வெளிப்படுகிறது. ஞானம் பனிமலை. அது கருணை மிகுதியில், கண்ணனின் பிரிவாற்றாமையாகிய தாபத்தில் உருகும்போது ப்ரேம கங்கை பெருகுகிறது. ஆசார்யாளின் அனுபவ ரஸம் இது.

இத்தகைய ப்ரஹ்மநிஷ்டன் தன் பாரமார்த்திக நிலை விட்டுக் கீழிறங்கி வ்யவஹார நிலைக்கு வந்தாலும் ஒரு போதும் பந்தப்படுவதில்லை; மோஹம் அடைவதில்லை என்கிறார் 'ஜீவன் முக்தானந்த லஹரி'யில். *முநிர் ந வ்யாமோஹம் பஜதி குருதீக்ஷாக்ஷத தமா: ।* குரு தீக்ஷை பெற்றவன் எப்படி மோஹமடைவான்? ப்ரேம ரஸம் பெருகி நிற்கும் நிலையில் இவனை 'ஞானி' என்று எப்படி அடையாளம் கண்டுகொள்வது? இவர் காட்டிக் கொடுக்கும் ரஸமே தனி. ரஸாநுபவத்தின் ரஸமான வெளிப்பாடு.

'கலிதாந் சித்ர ஸத்ருசாந்' என்று இயங்கும் உலகின் உயிரினங்களை ஓவியம் போல் பார்ப்பான். தான் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் சாக்ஷி எனவுணர்வான். ஸ்வயம் ஸாக்ஷாத் த்ரஷ்டா. ஒரு சமயம், தியானத்திலிருப்பான். கதா த்யானாப்யாஸை: । சில நேரங்களில் ஆனந்தம் பொங்கும் மனதோடு ஹரி பஜனத்தில் களித்திருப்பான். ப்ரகுர்வந் தேவஸ்ய ப்ரமுதித மநா: । சிவாயா: சம்போர் வா க்வசிதபிச விஷ்ணோரபி என்று சில சமயம் அம்பிகையின் நாமங்களையும், பிற சமயங்களில் கயிலை நாதனின் நாமங்களையும், மற்ற சமயங்களில் ஹரி நாமங்களையும் சொல்லிக்கொண்டு, கண்ணும் கண்ணீருமாகக் கைகொட்டித் திரிவான்.

நயன ரசிதாநந்த ஸலில: । தூங்குவது போலிருப்பான். கனவு காண்பவன் போல் காணப்படுவான். விழித்துக்கொண்டிருப்பான். அதே சமயம், மூன்று நிலைகளையும் கடந்தவனாக இருப்பான். நான், எனது அற்றிருப்பான். நிஸ்ஸங்க: । நல்லோர் மகிழ ஸஞ்சாரம்

செய்வான். ஸுஜந ஹ்ருதயானந்த ஜனக: ॥

பல நேரம் மௌனம். சில நேரம் பேச்சு. மற்ற நேரம் சிரிப்பு. வெறிக்கப் பார்ப்பதும், குதித்தோடுவதும், குழந்தைபோல் எடுப்பார் கைப்பிள்ளையாயிருப்பதும், 'பேயரொடு பித்தர் பான்மையென' இருப்பதும் இயல்பாகிவிட்டிருக்கும். பன்மையை இருமையில் ஒடுக்கி, இருமையை ஒருமையில் பொருத்தி, ஒருமையைத் தனிமையில் இருத்தி, ஒன்றேயான பரதத்துவத்தில் ஒன்றாகி நிற்பதும் ஞானியர் இயல்பு. இமாம் முக்தாவஸ்த்தாம் பரமசிவ ஸம்ஸ்த்தாம்.

இவனே ஸர்வஸங்க பரித்யாகி, நித்யயோகி, கவி என்று கவிகள் கூறுகின்றனர் என்கிறார். ஸதா த்யாகீ யோகீ கவிரிதி வதந்தி இஹ கவய: । ரஸமான வார்த்தைகளில் ரஸமான வாழ்விற்கான ரஸமான லக்ஷியத்தை ரஸமாகக் காட்டிக்கொடுக்கிறார்.

மனிதன், அக்ஞானத்தால் தனக்கென ஒரு முகவரியை ஏற்றிக் கொண்டு விடுகிறான். தனது நிஜமான முகவரியை இழந்து விடுகிறான். தன் இருப்பிடம் திரும்பத் தெரியாமல் தவிக்கிறான். இவனது தவிப்பறிந்து, தவிப்பு நீக்கி, முகவரி காட்டி, முகவரி கொடுத்து சுகவாரியில் சாதகனை ஆழ்த்தும் ஸ்ரீ சங்கர ரஸோக்தி தனிச்சுவையுடையது. அது பற்றியும்தான் பார்ப்போமே!

... வளரும்

## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவ முகாம், மதுரபுரி

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம் இந்த மாத எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் நடைபெற்றது.

டிசம்பர் 25-ஆம் தேதியன்று, காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவ முகாம் Col. Dr. K. Gopalan, MS. DLO அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

Col. Dr. K. Gopalan அவர்களுக்கு நமது அறக்கட்டளை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– Trustees

# பாலகர்களுக்கு ஒரு கதை - 96

முன்னொரு காலத்தில், ஒரு நாடு செல்வசெழிப்புடனும், பசுமையுடனும் விளங்கியது. ஒரு சமயம், அது, மழை குறைந்து வறட்சியினால் பாதிக்கப்பட்டது. அதனருகே இருந்த வனத்திலும் வறட்சி காணப்பட்டது. அங்கு ஒரு வேடன் வாழ்ந்து வந்தான். ''இன்று எப்படியாவது தன் குழந்தைகளுக்கு உணவு தரவேண்டுமே!'' என்ற கவலையுடன் வேட்டைக்குப் புறப்பட்டான். வெகுநேரம் சென்றும் ஒன்றும் அவன் கண் எதிரே தென்படவில்லை.

சிறிது நேரம் கழித்து அவனருகில் ஒரு புறா ஒன்று, பறந்து வந்து கொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவனுக்கு மனதில் ஒரு சந்தோஷம். 'எப்படியாவது அதைப் பிடித்து விடலாம்' என்று புறா அமர்ந்த இடத்திற்குச் சென்று அதை லாவகமாகப் பிடித்தான். அந்தப் புறா, அவனிடம் பேச ஆரம்பித்தது! புறா எங்காவது பேசுமா? இந்தப் புறா நம்மிடம் பேசுகின்றதே! என்று ஆச்சரியப்பட்டான் வேடன். இதை நல்ல விலைக்கு விற்கலாம். அல்லது வித்தை காட்டி நான்கு நபர்களிடம் காட்டி, பெரிய பணக்காரனாகி விடலாம் என நினைத்தான்.

ஆனால், புறாவோ அவனிடம் தன்னை விடுவித்துவிடும்படி, கெஞ்சிக் கூத்தாடியது. அவன் விடுவதாக இல்லை? புறாவானது அவனிடம் மறுபடியும், ''நீ என்னை விடுவித்துவிட்டால் உனக்கு ஒரு நன்மை செய்வேன்'' என்றது. உடனே அவன், ''எனக்கு ஏதாவது புதையல் காட்டுவாயா?'' என்று கேட்டான். ''பணம் இருக்கின்றவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் நிம்மதியாக இருக்கின்றார்களா என்ன? வாழ்க்கையில் நீ நிம்மதியாக வாழ மூன்று உபதேசங்களைச் செய்வேன்'' என்று அந்தப் புறா கூறியது. அதற்கு அந்த வேடன், புறாவைப் பார்த்து, ''நீ முதலில் உபதேசங்களைக் கூறு. பின்னர் உன்னை விடுதலை செய்வதைப் பற்றி யோசிக்கலாம். மேலும், உன்னை நான் விடுவித்தவுடன் நீ பறந்துவிட்டால் என்ன செய்வது?'' என்று சந்தேகத்துடன் கேட்டான்.

அதற்கு அந்தப் புறாவோ, 'நம்பிக்கையில்லாதவர்களுக்கு உபதேசம் செய்ய முடியாது. உனக்கு நம்பிக்கை இருந்தால் என்னை விடுதலை செய். நான் உனக்கு கூறப்போகும் உபதேசத்தில் முதல்

உபதேசத்தை உன் கையில் அமர்ந்துகொண்டும், இரண்டாவது உபதேசத்தை அந்த மரக்கிளையில் அமர்ந்துகொண்டும், மூன்றாவது உபதேசத்தை மலை உச்சியின் மீது அமர்ந்துகொண்டும் சொல்வேன்' என்றது.

அவன் யோசித்துப் பார்த்தான், 'நிம்மதியான வாழ்க்கை வாழ்வதுதான் சரியான வழி' என முடிவு செய்தான். உடனே புறாவிடம், அதை விடுதலை செய்வதாக ஒப்புக்கொண்டு விடுவித்து விட்டான்.

இப்பொழுது, புறா அந்த வேடனின் கைமீது அமர்ந்து கொண்டு வேடனைப் பார்த்து, முதல் உபதேசமாக 'எதையும் ஆராயாமல் முடிவு செய்யக்கூடாது' என்றது. வேடனும், 'நல்ல உபதேசம் தான்' என நினைத்தான்.

உடனே புறாவைப் பார்த்து, 'இப்பொழுது இரண்டாவது உபதேசத்தைக் கூறு?' என்றான். புறாவானது பறந்துச் சென்று மரக்கிளையில் அமர்ந்துகொண்டு, 'கைவிட்டுப் போன அதாவது கை நழுவிப்போன பொருளைப் பற்றி யோசிக்காதே, அழுது புலம்பாதே' என்றது. வேடனுக்கும் இந்த உபதேசமானது நல்ல உபதேசமாகத் தோன்றியது.

'மூன்றாவது உபதேசத்தைக் கூறு?' என்றான் வேடன். புறா இப்பொழுது மலை உச்சிக்குப் பறந்து சென்று அமர்ந்துகொண்டு வேடனைப் பார்த்து, 'என்னுடைய வயிற்றுக்குள் விலை உயர்ந்த ரத்தினம் ஒன்று உள்ளது. என்னைக் கொன்று, நீ அந்த ரத்தினத்தை விற்றிருந்தால் உனக்கு நிறையப் பணம் கிடைத்திருக்கும். நீ இந்த சந்தர்ப்பத்தை விட்டுவிட்டாய்' என்றது.

இதைக் கேட்டவுடன், அந்த வேடன், பெரியதாக அழுது புலம்ப ஆரம்பித்தான். அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. உடனே புறா சொன்னது, எங்கேயாவது புறாவின் வயிற்றில் ரத்தினம் இருக்குமா? நீ ஆராயாமல் நம்பிவிட்டாய், நானோ உன் கை நழுவி, உன்னை விட்டுப் பறந்த சென்றுவிட்டேன். இனிமேல், அந்த ரத்தினத்தைப் பற்றி கவலைப்பட்டு ஒன்றும் ஆகப் போவதில்லை'' என்று கூறி பறந்து சென்றது.

இதிலிருந்து, ஆராயாமல் எதையும் செய்யக்கூடாது என்றும், அவ்வாறு செய்துவிட்ட பிறகு அதையே நினைத்துக்கொண்டிருக்க கூடாது என்றும்' தெரிய வருகிறதல்லவா!

# மாலே மணிவண்ணா - 40

எம்பெருமானுக்கு, '**ப**கவான்' என்பதும் ஒரு திருநாமம். (ஸஹஸ்ரநாமம் 558வது நாமா) '**ப**கங்கள் உள்ளவர்' என்பது பொருள். **ப**கம் என்றால் ஆறு. ஆறு குணங்கள் உள்ளவர்; ஆதலால் **ப**கவான்.

பேராளுமை, வீர்யம், கீர்த்தி, செல்வம், பேரறிவு, வைராக்கியம் என்ற ஆறும் 'பகம்' ஆகும்.

எல்லாச் செய்திகளிலும், எல்லாவகையிலும், எல்லாவற்றிலும் தன்னை ஆட்படுத்திக்கொள்ளும் தன்மையே 'பேராளுமை' ஆகும். எல்லோருக்கும் மேலான பெருந்தலைமை; தனக்குமேல் தலைமையில்லாத் தன்மையாகும். 'தன் ஒப்பார் இல்லப்பன்', ஒப்பார் இல்லையெனவே, மிக்காரும் இல்லை என்பதாகும். இதுவே, பேராளுமை.

'வீர்யம்' என்பது எத்தகைய பெரிய பகைவர்களையும் எதிர்த்து வெல்கிற வல்லமை. 'கீர்த்தி' என்பது எல்லோராலும் புகழப்படுகிற தன்மை. 'செல்வம்' என்பதை நிறைவு எனலாம். செல்வத்தின் வடிவான லக்ஷ்மியிலிருந்து செல்வத்தால் பெறத்தக்க அத்தனை பேறுகளாலும் நிறைந்தவன். 'பேரறிவு, எல்லாவற்றையும் எக்காலத்தும் அறிந்துணர்ந்திருக்கும் தன்மை. முற்றும் உணர்தல், 'இயற்கை உணர்கென் ஆதல்' என்று 'திருக்குறள் எண்குணத்தான்' என்பதற்குப் பரிமேலழகர் தந்த விளக்கம் இங்கு பொருந்தும்.

'வைராக்கியம்' என்பது பற்றில்லாத நிலை. இதனை, நம்மாழ்வார்,

*''பற்றிலன் ஈசனும் முற்றவும் நின்றனன்*
*பற்றிலையாய் அவன் முற்றில் அடங்கே''* (திருவாய் 1:2.6)

என்ற திருவாய்மொழியில் குறிப்பிட்டார்.

இந்த ஆறு குணங்களும் இறைவனிடம் எப்போதும் நிறைந்திருப்பதால் அவர், உற்பத்தி, ஒடுக்கம், செல்வச் சேர்க்கை, ஆபத்து, அறிவு, அறியாமை என்ற உலகின் ஆறு நிலைகளையும் நன்றாக உணர்ந்தவராவார்.

பகவானது ஆறுகுணங்களில், 'ஆசை' என்னும் நெருப்பைத் தூண்டிவிட்டு, படைப்பை நிகழ்த்தும் ப்ரத்யும்நருக்கு ஐச்வர்யமும் (செல்வம்) வீர்யமும் அதிகம். இவர் புத்தி தத்துவத்தின் தேவதையாவார்.

எதனாலும் தடைப்படுத்த முடியாத செயலாற்றல் உள்ள அநிருத்தரோ காப்பிற்கானவர். ஆறு குணங்களில் சக்தியும், தேஜஸும் இவரிடம் அதிகம். மனம் தத்துவத்தின் தேவதையாவர்.

எல்லாவற்றையும் இழுத்து, ஒடுக்கி, மூல தத்துவத்தில் லயம் செய்யும் ஸங்கர்ஷணர் ஆறு குணங்களில் ஞானமும் பலமும் அதிகமானவர், இவர் அஹங்கார தத்துவத்தின் தேவதையாவார்.

இம்மூவருக்கும் அப்பாற்பட்டு, இம்மூன்று பணிகளிலும் சாக்ஷியாக, எல்லாமாக, எல்லாவற்றிலும் துலங்குபவராக இருப்பவர் 'வாசுதேவர்' ஆவார்.

வாசுதேவரில் தொடங்கி அநிருத்தரில் நிறைவுபெறும் 'வ்யூஹ' நிலையானது, அநிருத்தரின் பணியாகிய காத்தலை நடாத்த அவதாரம், அர்ச்சை என்ற பின்னுள்ள பெருநிலைகளுக்கும் வித்தாகிறது. ஆகையால் ''மால்'' என்னும் பெயரால் அழைக்கப் பெறுகிறார் அநிருத்தர்.

அவரது கண்களைப் 'பசிய கண்கள் உடைய மாலாகிய அநிருத்தனனே' என்ற பொருளில், 'பைங்கண்மால்' என்றது பரிபாடல். காத்தல் தொழில் உடையவர் கண்கள் பசுமையாக எப்போதும் குளிர்ச்சியுடையதாக இருத்தலே இயல்பாகும்.

எம்பெருமானது நான்கு வ்யூஹ நிலைகளையும்,

*''செங்கண் காரி கருங்கண் வெள்ளை*
*பொன்கண் பச்சை பைங்கண் மாஅல்''*

என்று குறிப்பிட்டு, வாசுதேவன், ஸங்கர்ஷணன், ப்ரத்யும்னன், அநிருத்தன் என்ற பெயர்களை, அழகுத் தமிழில் காரி, வெள்ளை, பச்சை, மால் என்று காட்டியதும் இங்கு நினைக்குத்தருவது.

நான்கு நிலைகளிலும் பகவானது, திருக்கண்களை செங்கண், கருங்கண், பொன்கண், பைங்கண் என்று நான்கு நிறம் உடையதாகச் சொல்லியதும் ஓர் சிறப்பு. பொன்னில் நான்கு வகை கூறுவது வழக்கு. செம்பொன், கரும்பொன், வெண்பொன்,

பசும்பொன் இவை முறையே ஆடகம், சாம்பூநதம், சாதரூபம், கிளிச்சிறை என்று அழைக்கப்பெறும்.

'பொன்' எனப் பெறும் திருமகளைத் தன்னிடத்தே உடையவனாகிய பெருமானும் பொன்னின் நால்வகை போல் நான்கு நிறம் பெற்ற திருக்கண்களை உடையவனாக இருத்தல் வியப்பில்லையே!

பெருமானது கரிய நிறத்தால், 'காரி' எனவும், வெள்ளை நிறத்தால் 'வெள்ளை' எனவும், அழைத்தது போல, மற்ற இரண்டு நிலைகளையும் பரிமேலழகர், சிவந்த உடம்பினை உடைய காமனே என்று ப்ரத்யும்நனுக்கும், பச்சை உடம்பினை உடைய அநிருத்தனே என்று அநிருத்தனுக்கும் பொருள் செய்திருக்கிறார். கண் மேல் ஏற்றாது நிறத்தைத் திருமேனிமேல் வைத்துச் சொல்லியிருக்கிறார்.

இவ்வகையில், பெருமான், கருமை, வெள்ளை, சிவப்பு, பச்சை என்று நான்கு நிறமான திருமேனி உடையவராக, வ்யூக நிலையில் விளங்குகிறார் என்பது உரையாசிரியர் தரும் விளக்கமாகும் - இது ஒரு வகையில், காற்றின் கருமை, நீரின் வெண்மை, தீயின் சிவப்பு, மண்ணின் பசுமை ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகவும் அமைகிறது.

நாற்பெருவியூக நிலைக்கு மேலாக இருக்கின்ற பரவாசுதேவன், ஆகாயவடிவினன் என்றாகிறபோது, ஏனைய நிலம், நீர், தீ, காற்று என்ற நான்கு பூதத்தின் மூலக் கூறுகளும் பெருமானிடத்திலேயே ஒடுங்கித் தோன்றுகின்றன என்ற குறிப்பினை வ்யூகநிலை நமக்கு எடுத்துக்காட்டி, அவன் உலகமே உருவம் ஆயினன் என்பதை உணர்த்தி, 'மாமாயன்' என்னும் அவனே உலகம் என்ற பேருண்மையைத் தெரிவிக்கின்றது.

''கோணை பெரிதுடைத்து எம்பெம்மானைக் கூறுதலே'' (திருவாய் 2:5.10) என்று நம்மாழ்வார் கூறியபடி, பகவானது விளையாட்டை முற்ற அறிதல் நம்மனோர்க்கு இயலாது என்றுணர்ந்து மேற்செல்வோம்.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 39

ஸ்ரீ ப்ருந்தாவனதாஸ்ஜி, பர்சானாவில் வாழ்ந்து வந்தார். தினமும், அதிகாலையில் எழுந்து ஸ்னானம், நித்யகர்மா ஆகியவைகளை முடித்துவிட்டு ஹரிநாம ஜபமாலை வைக்கும் பையுடன் ப்ருந்தாவனத்தை நோக்கி கிளம்பிவிடுவார். ப்ரசித்தமான ஏழு டாகுர்ஜியின் கோவில்களுக்குச் சென்று பகவானை தரிசனம் செய்துவிட்டு, துளஸீ, ஸ்ரீரஜஸ், ஸ்ரீசரணாம்ருதம் ஆகியவற்றைப் பெற்றுக்கொண்டு பர்சானா திரும்புவார். மாலையில் மதுகரிக்குச் சென்று பிக்ஷைப் பெற்று வருவார். யார் அழைத்தாலும், எங்கும் செல்ல மாட்டார்.

ஒருநாள், ப்ருந்தாவனத்திலுள்ள கோவிந்தஜி கோவிலுக்கு அவர் சென்றபோது, அங்கு, பெரிய உத்ஸவம் நடந்து கொண்டிருந்தது. அங்குள்ள வைஷ்ணவ பாபாஜி, கோவிந்தனின் பிரஸாத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ப்ருந்தாவன்தாஸ்ஜியை மிகவும் வற்புறுத்தினார். அவர்கள், ப்ருந்தாவன்தாஸ்ஜியை மிகவும் கெஞ்சி, காலில் விழாத குறையாக வேண்டியும் அவர் ப்ரஸாதத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார். ஆனாலும், அவர்கள் விடவில்லை. அவரை மிகவும் வற்புறுத்த, வைஷ்ணவ அபசாரம் ஏற்பட்டுவிடப் போகிறதே எனப் பயந்து, ப்ருந்தாவன்தாஸ்ஜி கடைசியில் தன் பிடிவாதத்தைத் தளர்த்தி அந்தக் கோவில் ப்ரசாதத்தை உண்டார். அடுத்தநாள் காலை எழுந்து தினம் செய்வது போல் கையில் ஜபமாலை பையுடன் ப்ருந்தாவனத்தை நோக்கிக் கிளம்பும்போது அவர், தன் வலது கையில் உள்ள கட்டை விரல் ஜடமாக அசையாமல் இருப்பதைக் கண்டு ஆச்சர்யமும் கவலையும் ஒருங்கே அடைந்தார். அவரால் ஜபமாலையை உபயோகித்து நாமஜபம் செய்ய முடியவில்லை. ஏன் இப்படி திடீரென்று ஆயிற்று என்றும் அவருக்குத் தெரியவில்லை. கோவிந்த குண்டத்தில் வாழ்ந்துவந்த ஸ்ரீ மனோஹர்தாஸ் பாபாஜியிடம் ஓடிச்சென்று, அவரது சரணங்களில் விழுந்து ப்ருந்தாவனதாஸ்பாபா அழ ஆரம்பித்தார். மனோஹரதாஸ்பாபா கேட்டார், ''ஏனப்பா? உனக்கு என்ன ஆயிற்று?''

''பாபா! எனக்கு சர்வநாசம் ஏற்பட்டுவிட்டது! ஏனென்று தெரியவில்லை. என்னால் நாமஜபம் செய்ய முடியவில்லை. என் வலது கை கட்டைவிரல் உபயோகமற்றுப் போய்விட்டது. நான் என்ன செய்வேன்! நீங்களே இதற்கு என்ன காரணம்? என்று கூறுங்கள்'' என ப்ருந்தாவனதாஸ் அழுதுகொண்டே சொன்னார்.

மனோஹரதாஸ், ''நீ நேற்று எங்கு ப்ரஸாதம் உண்டாய்?'' என்று வினவினார்.

ப்ருந்தாவனத்திலுள்ள ஸ்ரீகோவிந்தஜி கோவில் ப்ரஸாதம் தான் சாப்பிட்டேன் என்று பதிலுரைத்தார் ப்ருந்தாவனதாஸ்.

''சரி! அங்கு சென்று நேற்று யாருடைய பணத்தால் கோவிந்தஜிக்கு போக் (இனிப்பு) செய்விக்கப்பட்டது என்று கேட்டு வா'' என்றார் மனோஹரதாஸ்.

ப்ருந்தாவனதாஸ், கோவிந்த்ஜி மந்திருக்குச் சென்று பூஜாரியிடம் விசாரித்தார். முதல் நாள் கோவிந்த்ஜியின் போக் ஒரு வேசியின் தனத்தால் செய்விக்கப்பட்டது என்று பூஜாரி கூறினார். இந்த விவரத்தை ப்ருந்தாவனதாஸ் மனோஹரதாஸிடம் தெரிவித்தார். உடனே அவர், ''உன் உடலுக்கு இப்படிப்பட்ட அன்னம் ஒத்துக் கொள்ளவில்லை! போக்! மூன்று நாள் தினமும் ஸ்ரீகுண்டத்தில் ஸ்னானம் செய்துவிட்டு ஈர உடையுடன் கிரிராஜனை வலம் செய்து வா. வழியில் எது கிடைக்கிறதோ அதைத்தவிர வேறு எதுவும் உண்ணாமல் இரு. எல்லாம் சரியாகி விடும்'' என்றார்.

ப்ருந்தாவனதாஸ் பாபாவும் அதுபோல் மூன்று தினங்கள் செய்ய நான்காவது நாள் காலை, அவரது வலது கை கட்டைவிரலில் உணர்வு வந்துவிட்டது. முன்புபோல் அவரால் ஜபம் செய்ய முடிந்தது.

சாதகர்களுக்கு ஆகார சுத்தம் எத்தனை அவசியம் என்று இந்த சம்பவத்திலிருந்து தெரிகிறதல்லவா?

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 121

*தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிவியான்*
*நட்டமாவே னருள் அருணாசலா* (தொடர்ச்சி)

குருநாதரானவர், சிஷ்யனுக்குக் கொடுக்கும் ஸ்பரிச தீக்ஷையானது, (தொட்டருட் தொட்டு அருள்) சிஷ்யனின் வாசனைகளை (மனதில் உள்ள எண்ணங்கள்) வெகுவாக நீக்கிவிடும். இப்படிப்பட்ட (வாசனைகள் குறைந்த நிலை) ஒரு நிலைமையை, சீடனானவன் குருநாதர் அருளின்றி அடைய முடியாது. பல மஹான்களின் வாழ்க்கை வரலாற்றில் இதை பார்க்க முடியும்.

ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர், வங்காள தேசத்தில் வாழ்ந்தவர். அவர், தக்ஷிணேஸ்வரக் கோயிலில் குடியுள்ள காளிதேவியிடம் பக்தி பூண்டு, அக்கோயில் வளாகத்தில் உள்ள ஒரு அறையிலேயே வாழ்ந்து வந்தவர். பரமஹம்ஸரைப் பார்க்க பலதரப்பட்ட மக்கள் வந்தனர். கல்லூரிகளில் படித்து வந்த, இளம் தலைமுறையினரும் பரமஹம்ஸரை நாடி வருவர். தினமும் பரமஹம்ஸர் பரவச நிலையை அடைவார். தன்னிடம் வரும் இளம் தலைமுறையினருக்கு, வேதாந்தபரமான உபதேசங்களை சொல்வார். தன்னிடம் வரும் இளைஞர்களிடம் தூய அன்பை வைத்துவிடுவார். அங்கு சென்று வந்த இளம் தலைமுறையினரும் பரமஹம்ஸரிடம் மிகப்பெரும் மரியாதையையும், அன்பையும் வைத்து, அவருடைய உபதேசங்களை கேட்டு, அதன்படி வாழ்ந்து பயனடைந்தனர்.

இப்படி தினமும் இளைஞர்கள் தக்ஷிணேஸ்வரம் சென்று வந்தது, அவர்களுடைய குடும்பத்தில் உள்ளோரிடம் சஞ்சலத்தை ஏற்படுத்தி விடும். ஆதலால் அவர்கள், ''நீ அங்கு எல்லாம் செல்லக்கூடாது. சென்றால் வாழ்வில் முன்னேற முடியாது. ஆதலால் செல்லக்கூடாது'' என்று கூறி, தடுத்து விடுவார். அம்மாணவர்களும் வீட்டிலிருப்போரின் பிடிவாதத்தால் 10, 20 நாட்கள் பரமஹம்ஸரை பார்க்கச் செல்லாது இருப்பர். ஆனால், இங்கு பரமஹம்ஸரோ

அவர்களைப் பார்க்காமல் தவித்து விடுவார். சிறிது நாட்கள் கழித்து அவர்கள் வந்தவுடன், 'ஏன் வரவில்லை?' என விவரங்களை கேட்டறிவார். அவர்களிடம் தன்னைப் பார்க்கச் செல்லக்கூடாது எனக் கூறுபவர்களை ஏதாவது ஒரு காரணம் காட்டி, தன்னிடம் அழைத்து வரச் சொல்வார். அந்த இளைஞர்களும், தங்கள் வீட்டில் ஏதாவது ஒரு காரணம் சொல்லி, அவர்களையும் அழைத்து வந்து விடுவர். அப்படிப் புதிதாக வந்துள்ளோரை அடையாளம் கண்டுகொண்டு பரமஹம்ஸர், அவர்களைத் தொட்டுத் தொட்டு பேசுவார். என்ன மாற்றம் இதனால் நிகழும் என்றால், இப்படி புதிதாக வந்தவர்கள், அவர்களைக் கூட்டி வந்தோரைவிட மிகவும் சிரத்தையாக பரமஹம்ஸரிடம் ஈடுபட்டு விடுவர். என்ன காரணம் எனில், பரமஹம்ஸர் அவர்களைத் தொட்டுத் தொட்டு பேசும் பொழுது, அவர்களின் வாசனைகள் வெகுவாகக் குறைந்து, அவர்களுக்கு ஆன்மீகத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுவிடும். அதனால், அவர்கள் பரமஹம்ஸரைப் புரிந்துகொண்டு அவரிடம் ஈடுபடுவர்.

சைதன்ய மஹாப்ரபு என்னும் ஒரு மிகப்பெரிய மஹாத்மாவும் வங்காள தேசத்தைச் சேர்ந்தவர். அவர், எப்பொழுதும் கிருஷ்ண கீர்த்தனத்தில் மூழ்கி, கிருஷ்ணப்ரேமையில் மூழ்கி இருக்க கூடியவர். இவர் ஒரு சமயம், கடலுக்கு அருகாமையில் இருந்தபொழுது, கடலைப் பார்த்தவுடன், ''கிருஷ்ணா, நீ ஒரு மச்சாவதாரம் (மீனாக) எடுத்தாயே'' என்று நினைத்துக்கொண்டே ப்ரேமையில் மூழ்கி, கடலில் விழுந்துவிட்டார். அப்படியே ஒரு சவம் போல் கடலில் கிடந்தார். மீனவர்கள் கட்டுமரம் கட்டிக்கொண்டு, கடலில் மீன்பிடிக்கச் சென்றபொழுது, வீசிய வலையில், இவர் மாட்டிக் கொண்டார். பெரிய மீன் கிடைத்தது என எண்ணி, மீனவர்கள் இவரை கரைக்குக் கொண்டு வந்தனர். கரைக்கு வந்தவுடன், இவரை நன்றாக அடையாளம் கண்டு கொண்டனர் மீனவர்கள். அவருக்கு முதலுதவி செய்து, அவருடைய உடலில் இருந்த நீரை வெளியேற்றி, அவருக்கு சுயநினைவைக் கொண்டு வந்தனர். எழுந்த சைதன்யர், மறுபடியும் ஸ்ரீ கிருஷ்ண கீர்த்தனம் செய்துகொண்டே, போய் விட்டார். ஆனால் அவருக்கு தொட்டு முதலுதவி செய்த மீனவர்கள், அன்றிலிருந்து கடலுக்கு மீன் பிடிக்க செல்லவில்லை. குறிப்பிட்ட அவர்களைத் தவிர,

ஏனையோர் கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர். அது மட்டுமல்ல, அந்த குறிப்பிட்ட சிலர், மறுநாளிலிருந்து ஸ்ரீ க்ருஷ்ண கீர்த்தனம் செய்துவர ஆரம்பித்தனர். அவர்கள் உடலில் மயிர்க்கூச்சலும், ஆனந்தக் கண்ணீரும் காணப்பட்டது. இவையெல்லாம் பக்தியின் லக்ஷணங்கள். இவற்றைக் கண்ட அவர்களின் மனைவிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. மீதமிருந்த மீனவர்கள், அவர்களிடம் ''உங்கள் கணவன்மார்கள், நேற்று சைதன்யருக்கு முதலுதவி செய்தபின்தான், இப்படி மாறிவிட்டனர்'' என்று கூற அந்த மனைவிமார்களும் சைதன்யரிடம் சென்று முறையிட்டனர். ''இப்படி எங்கள் கணவர்களை மாற்றிவிட்டீர்களே! எங்களுக்கு குடும்பம் உள்ளதே! அதனால், அவர்கள் மறுபடி மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபடவேண்டும்'' என வேண்டினார். சைதன்யர் உடனே, அவர்களிடம், ''யாராவது பாவத்தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்து வருவார். அவர்களிடம் உணவு பெற்றுக் கொடுத்தால் சரியாகிவிடும்'' என்றார். அதன்படியே செய்தபின், மீனவர்களும் மாறிவிட்டனர். பக்தி என்பதை அறியாத அம்மீனவர்கள் கூட சைதன்யரின் உடலை தொட்டதால் எத்தகைய மாற்றம் பெற்றனர் என்பது ஆச்சரியமளிப்பதாக உள்ளது. அவர்களது வாசனைகள் சைதன்யரின் உடலைத் தொட்டவுடன் அகன்றதால் இது சாத்தியமாயிற்று.

இப்படி ''தொட்டருள் கைமெய்'' தொட்டு அருள் செய்யாவிடில், ''நட்டமாவேன்'' - இப்பிறவி வீணாகிவிடும் என்று இங்கு பொருள்படுகிறது. இறைவனோ, குருவோ தொட்டு அருள் செய்துவிட்டால் மிக உன்னத நிலை கூட எளிதில் கிட்டும் என்பதில் ஐயம் ஏன்?

ஒரு மஹானை தரிசிக்கச் சென்றால், பூவோ, பழமோ கொண்டு செல்கிறோம். அவற்றை அவர் அணிவதோ, புசிப்பதோ இல்லை எனினும், தொட்டு வாங்கி கொள்கிறார். அவர் உபயோகிக்கா விடினும் அவர் வாங்கிக்கொண்டதனால், 'தனது' என்று ஏற்றுக் கொண்டதாக ஆகிவிடுகிறது. இது கொடுத்தவரின் நன்மைக்கே என்று ஆகிறது. புதிதாக பிறந்த ஒரு குழந்தையை பார்க்கசென்றால், அதன் கையில் பணம் கொடுப்பதுண்டு. அக்குழந்தைக்கு அப்பணத்தின் மதிப்பு தெரியாது. இருப்பினும் அக்குழந்தையிடம் தான் கொடுப்பர். குழந்தையிடம் கொடுப்பது

அதன் பெற்றோரைத்தான் சென்றடையும் என்பது தெரிந்துதான் இப்படிச் செய்வர். அதுபோல், மஹான்களுக்கு கொடுக்கும் எதையும் இறைவனே ஏற்றுக்கொள்கிறான். அவர்கள் ஸ்வீகரிப்பது, இறைவன் தனது என்று ஏற்றுக்கொண்டது ஆக ஆகிறது. அதுபோல், 'தொட்டருள்!-அருணாசலா! நீ என்னை தொட்டு அருள் செய். ஏனெனில், நீ தொட்டுவிட்டால், பின் நான் உன்னுடைய உடைமை ஆகிவிடுவேன். இல்லையெனில், எனது பிறப்பு வீண் என்கிறார் பகவான் ஸ்ரீரமண மஹரிஷிகள்.

(தொடரும்)

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

- மதுரமுரளிக்கான சந்தா தொகையை, M.O. or D.D. ஆக **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்''** என்ற பெயரில் மட்டுமே New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083 Telephone : 044-24895875 email ID : publications@madhuramurali.org என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

  உள் நாடு : ஆண்டு சந்தா ரூ. 60/-

  ஆயுள் சந்தா ரூ. 1000/- (20 வருடங்கள்)

  வெளி நாடு : வருட சந்தா ரூ. 300/-

- சந்தா எண், சந்தாதாரர் முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ளமாட்டாது.
- மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் Address labelல் இரண்டாம் வரியில் உள்ளது.
- சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்பினால்தான் வரும் மாதத்தில் செயல்படுத்த முடியும்.
- மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

# அன்பார்ந்த மதுரமுரளி வாசகர்களுடன் சில வார்த்தைகள்

இதுநாள் வரையில், 1) ஸ்ரீ ஸாந்தீபனி குருகுல ட்ரஸ்ட், 2) குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 3) சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்திரா போன்றவைகளின் பதிவு அலுவலகமாக ''ப்ரேமிகபவனம்'' 2, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை-83, செயல்பட்டு வந்தது. ஆனால், சில மாதங்களுக்கு முன்பாக எல்லாவற்றையும் No. 24-A, Mangai Street, Jafferkhanpet, Chennai - 600 083 என்ற முகவரிக்கு பதிவு அலுவலமாக மாற்றப்பட்டது.

மேற்படி விலாசம், பதிவு அலுவலமாக இருந்தபோதிலும், நிர்வாக அலுவலகம் (Administrative Office)

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875 email ID : contact@madhuramurali.org

என்ற இடத்தில் விஜயதசமியிலிருந்து இயங்கி வருகிறது.

இந்த நிர்வாக அலுவலகம், காலை 8 மணி முதல் பிற்பகல் 12 மணி வரையிலும், மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையிலும் திறந்து இருக்கும். திரு. S. நடராஜன் என்பவர் இந்த அலுவலகத்திற்குப் பொறுப்பாளர் ஆவார்.

மதுரமுரளி சந்தாவை புதுப்பித்தல், மதுரமுரளி ஆயுள்சந்தா செலுத்துதல். தங்களுடைய விலாசம் மாறுதலைத் தெரிவித்தல், மதுரமுரளி பழைய ப்ரதிகளை கேட்டுப் பெறுதல், விளம்பரம் அறிவித்தல், மதுரமுரளியில் வெளியிடுவதற்கான விஷயங்களை அனுப்புதல் போன்றவற்றிற்கு, நேரிலோ, தொலைபேசியிலோ, கடிதம் மூலமாகவோ இந்த அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம்.

சத்ஸங்கத்தின் நிகழ்ச்சிகள் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜி பங்கு பெறும் நிகழ்ச்சிகளின் விபரங்கள், ஸ்ரீ ஸ்வாமிஜியைப் பார்க்க விரும்புவோர், அதற்கான நேரத்தை தெரிந்துகொள்வதற்கு, மேற்படி அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.

நாம் செய்துவரும் தொண்டுகளில் பங்குபெற விரும்புபவர்கள், உதாரணமாக, வேத பாடசாலை, ஆலயத் திருப்பணி, ஆஸ்ரமம் மற்றும் பொதுத்தொண்டு இவற்றில் பங்குபெற விரும்புபவர்கள், மேற்படி அலுவலகத்தைத் தொடர்புகொண்டு அதற்கான விவரங்களைக் கேட்டறிந்து, தாங்களும், இயன்ற அளவில் பங்குகொள்ளலாம்.

**நன்கொடை அளிக்க விரும்புபவர்கள், கண்டிப்பாக ரசீதைக் கேட்டு பெற்றுக்கொள்ள வேண்டும். ரசீது வரவில்லை என்றால், அதை தெரியப்படுத்திப் பெற்றுக்கொள்ளுதல் அவசியம்.**

எல்லா கடிதத்தொடர்புகளும் மேற்படி அலுவலகத்திற்குத்தான் (Administrative Office) அனுப்பவேண்டும். தங்களுடைய ஆன்மீகம் விஷயமான சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புபவர்கள், கடிதங்களை மேற்படி விலாசத்திற்கே அதை அனுப்பலாம். ஆனால் கடிதத்தின் மேல், "The Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்பதை மறக்காமல் குறிப்பிட வேண்டும். திருமண அழைப்பிதழ் மற்றும் ஆன்மிக சம்பந்தமான அழைப்பிதழ்கள் போன்றவற்றை இந்த அலுவலகத்திற்கு அனுப்பினால், அவைகள் ஸ்வாமிஜியின் பார்வைக்குக்கொண்டுச் செல்லப்பட்டு ப்ரசாதம் அனுப்பி வைக்கப்படும்.

இந்த அலுவலகத்தின் தொலைபேசி எண். 044-24895875. இங்கு Fax வசதியும் உண்டு. மேற்படி தகவல்களுக்காக வேறு யாரையும் தொடர்புகொள்ள வேண்டாம். ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட தொலைபேசி எண் எதுவும் கிடையாது. உபன்யாச கேசட்டுகள் மற்றும் மிஷன் வெளியீடு புத்தகங்கள், கோபி சந்தனம், துளசி மாலை, பெருமாள் திருப்படங்கள், போன்றவை மேற்படி அலுவலகத்தில் கிடைக்கும்.

நமது ''மதுரபுரி'' ஆஸ்ரமத்திலும், மற்றும் இதர ஸ்தாபனத்திலும் முழுநேரமாக தங்கி, ஆன்மிக சாதனைகள் செய்து வருபவர்கள் ஒருவரும் கிடையாது. நமது ''மதுரபுரி'' ஆஸ்ரம வளாகத்தில், பாடசாலை இயங்கி வருகிறது. பகவானுக்கு பூஜைகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. இவற்றைக் கவனித்துக் கொள்பவர்கள் மட்டுமே அங்கு தங்குகிறார்கள். அதாவது, பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியர், படிக்கும் மாணவர்கள் மற்றும் அவர்களுடைய உணவுத் தேவைகளைக் கவனித்துக் கொள்பவர்கள், பெருமாள் பூஜையைப் பார்த்துக் கொள்பவர்கள் மட்டுமே, முழுநேரமாக அங்கு தங்கி உள்ளனர்.

# செய்திகள்

### டிசம்பர் 1-ஆம் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில் பகவான் யோகிராம்சுரத்குமார் அவர்களின் ஜயந்தியை முன்னிட்டு, காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அகண்ட ''யோகிராம்சுரத்குமார்...'' நாம பஜனை நடைபெற்றது.

### டிசம்பர் 10-ஆம் தேதி

சென்னை பெசன்ட் நகர், ஊரூர்குப்பத்தில் அமைந்துள்ள ஸ்ரீ க்ருஷ்ணர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு, மாலை 4 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். அங்கு ஒவ்வொரு வாரமும் ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

### டிசம்பர் 11-ஆம் தேதி

படப்பை, சாலமங்கலம் கிராமக்கோயிலில் கும்பாபிஷேகம் காலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது.

### டிசம்பர் 12-ஆம் தேதி

ஆம்பூர், கங்காபுரம், கிராம திருக்கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மாலையில் ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

### டிசம்பர் 15-ஆம் தேதி

மதுரபுரியில் விஷ்ணுதீபத்தை முன்னிட்டு இரவில் பாகவதபவனம் தீப விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதன், புறப்பாடு கண்டருளினார். மஹாரண்யம், ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் விஷ்ணுதீபத்தை முன்னிட்டு ஸஹஸ்ரதீப சேவை நடைபெற்றது. உத்ஸவர் பக்தகுதூஹலன் உள்ப்ராகாரப் புறப்பாடு கண்டருளினார்.

### டிசம்பர் 11-ஆம் தேதி, 27-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு, மதுரபுரியில், ஸ்ரீ ஸ்வாமிஜி மாதுரீ ஸகீஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம், பூஜை செய்தார்கள்.

### டிசம்பர் 24-ஆம் தேதி, 25-ஆம் தேதி திருமாலை

சென்னை தி.நகர், வெங்கட்நாராயண ரோடு, திருப்பதி தேவஸ்தானம் TTD Information Centre ப்ரவசன மண்டபத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி, மாலை 6.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை ப்ரவசனம் செய்தார்கள்.

### டிசம்பர் 27-ஆம் தேதி

காஞ்சி ஸ்ரீ மஹாபெரியவர்கள், ஸ்ரீ சந்திரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆராதனையை முன்னிட்டு, சென்னை ப்ரேமிக பவனத்தில் மாலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை, ஸ்ரீ ஸ்வாமிஜி முன்னிலையில், ப்ரபல கடவித்வான் ''ஸ்ரீ விநாயகராம்'' அவர்களின் குமாரர் ஸ்ரீ உமா மகேஷ் மற்றும் குழுவினரின் சங்கீத கச்சேரி நடைபெற்றது.

---

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்**

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O, படப்பை P.O

*2005 டிசம்பர் 16-ஆம் தேதி முதல் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாசபெருமாள் திருக்கோயிலில் தினமும் காலை 4.30 மணிக்கு தனுர்மாத பூஜை நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.*

கோயில் தரிசன நேரம் :

காலை 4.30 மணி முதல் காலை 9.30 மணி வரை
மாலை 5.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை

101.2006 — செவ்வாய்கிழமை ஸ்ரீ வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு காஞ்சன்காடு ஆனந்தாஸ்ரமம், ஸ்ரீ ஸ்வாமி ராமதாஸ் அவர்கள் பக்தர்களால், ''அகண்ட நாமகீர்த்தனம்'' காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். மாலை உத்ஸவர் உள்ப்ராகார புறப்பாடு கண்டருள்வார்.

**மங்களானி பவந்து**